சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 12.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **100/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-19 |
| சாட்சியின் பெயர் | : | நவீன் |
| தந்தை பெயர் | : | நாகராஜன் |
| கிராமம் | : | திருவாரூர் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | மருத்துவ துறையில் மூத்த உதவி பேராசிரியர் (சட்டம் சார்ந்தது) |
| வயது | : | 39 |

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 10 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1 முதல் 10 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில், சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் மூத்த உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.11.2021ம் தேதியன்று சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் பணியிலிருந்தபோது திருவாரூர் தாலுக்கா குற்ற எண் 873/2021 வழக்கில் சம்மந்தப்பட்ட குமரேசன், 30 வயதுடைய இறந்த ஆண் நபரை காவல் ஆய்வாளர் அவர்கள் பிணக்கூராய்வு செய்ய சிறப்பு உதவி ஆய்வாளரான கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மூலம் வேண்டுகோள் விண்ணப்பம் பெறப்பட்டது. அன்றைய தினம் சுமார் காலை 10.50 மணியளவில் பிணக்கூராய்வு தொடங்கப்பட்டது. நல்ல உடல்வாகு கொண்டு ஆணின் பிரேதமானது மல்லாந்த நிலையில் காணப்பட்டது. பிண விரைப்பு உடல் முழுவதும் காணப்பட்டது. இறப்பிற்கு முன் அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் பின்வருமாறு

1) 26 x 4 cm x எலும்பு ஆழத்திற்கு வலது புற கண் புருவத்திலிருந்து இடது புற காதின் மேல்பக்கம் வரை மற்றும் இடது புற நெற்றி, இடது புற உச்சந்தலை, மற்றும் இடது புற தலை ஆகிய பகுதிகளில் சாய்ந்த வாக்கில் வெட்டுக்காயம் காணப்பட்டது. அக்காயத்தை மேலும் கூராய்வு செய்து பார்த்ததில், இடது புற மண்டை எலும்பு, மூளை திரை, மூளை அனைத்தும் வெட்டப்பட்டு அதை சுற்றியுள்ள மென் திசுக்கள் கருஞ் சிவப்பு நிற கன்றிய காயங்கள் காணப்பட்டது.

2). 13 x 3 cm x எலும்பு ஆழத்திற்கு இடது புற உச்சந்தலையிலிருந்து வலது புற பின் தலை வரை சாய்ந்த வாக்கில் வெட்டுக்காயம் காணப்பட்டது. அக்காயத்தை மேலும் கூராய்வு செய்து பார்த்ததில், இடது புற உச்சந்தலை எலும்பு, வலது புற பின்பக்க எலும்பு, மூளை திரை, மூளை அனைத்தும் வெட்டப்பட்டு அதை சுற்றியுள்ள மென் திசுக்கள் கருஞ் சிவப்பு நிற கன்றிய காயங்கள் காணப்பட்டது.

3). 9 x 2 cm x எலும்பு ஆழத்திற்கு இடது புற உச்சந்தலையில் சாய்ந்த வாக்கில் வெட்டுக்காயம் மேல்கூறிய இரண்டாம் காயத்திலிருந்து 3 செ.மீ மேலே காணப்பட்டது. அக்காயத்தை மேலும் கூராய்வு செய்து பார்த்ததில், இடது புற உச்சந்தலை எலும்பு, மூளை திரை, மூளை அனைத்தும் வெட்டப்பட்டு அதை சுற்றியுள்ள மென் திசுக்கள் கருஞ் சிவப்பு நிற கன்றிய காயங்கள் காணப்பட்டது.

4). 22 x 5-7 cm x எலும்பு ஆழத்திற்கு இடது புற தலையிலிருந்து இடது புற கன்னம் மற்றும் இடது புற தாடை வரையில் சாய்ந்த வாக்கில் வெட்டுக்காயம் காணப்பட்டது. மேலும் மேற்படி காயத்தை கூராய்வு செய்து பார்த்ததில், இடது புற மண்டை எலும்பு, மூளை திரை, மூளை, இடது புற கன்னத்தில் உள்ள எலும்பு மற்றும் இடது புற தாடை எலும்பு அனைத்தும் வெட்டப்பட்டு அதை சுற்றியுள்ள மென் திசுக்கள் கருஞ் சிவப்பு நிற கன்றிய காயங்கள் காணப்பட்டது.

5). 10 x 5 cm x எலும்பு ஆழத்திற்கு தாடையின் நடுப்பகுதியிலிருந்து, வலது புற கன்னத்தின் வழியாக வலது காது வரை சாய்ந்த வாக்கில் வெட்டுக்காயம் காணப்பட்டது. வலது புற காது இரண்டு துண்டாக வெட்டுப்பட்டு காணப்பட்டது. மேலும் அக்காயத்தை கூராய்வு செய்து பார்த்ததில் வலது புற கன்னத்தில் உள்ள எலும்பு, தாடை எலும்பு அனைத்தும் வெட்டப்பட்டு அதை சுற்றியுள்ள மென் திசுக்கள் கருஞ் சிவப்பு நிற கன்றிய காயங்கள் காணப்பட்டது.

6). 18 x 6 cm x எலும்பு ஆழத்திற்கு இடது புற தாடையிலிருந்து, இடது புற கன்னம் வழியாக இடது புற காது வரை சாய்ந்த வாக்கில் வெட்டுக்காயம் காணப்பட்டது. இடது புற காது பல துண்டாக வெட்டுப்பட்டு காணப்பட்டது. மேலும் அக்காயத்தை கூராய்வு செய்து பார்த்ததில் இடது புற கன்னத்தில் உள்ள எலும்பு, தாடை எலும்பு அனைத்தும் வெட்டப்பட்டு அதை சுற்றியுள்ள மென் திசுக்கள் கருஞ் சிவப்பு நிற கன்றிய காயங்கள் காணப்பட்டது.

7). 5 x 2 cm x எலும்பு ஆழத்திற்கு மூக்கில் சாய்ந்த வாக்கில் வெட்டுக்காயம் காணப்பட்டது. மேலும் அக்காயத்தை கூராய்வு செய்து பார்த்ததில் மூக்கில் உள்ள எலும்புகள் வெட்டப்பட்டு அதை சுற்றியுள்ள மென் திசுக்கள் கருஞ் சிவப்பு நிற கன்றிய காயங்கள் காணப்பட்டது.

8). 16 x 8 cm x கழுத்து குழி ஆழத்திற்கு முன் மற்றும் கழுத்தின் மேல் மூன்றாம் பகுதியில் சாய்ந்த வாக்கில் வெட்டுக்காயம் காணப்பட்டது. மேலும் அக்காயத்தை கூராய்வு செய்து பார்த்ததில் அக்காயத்தின் அடியில் உள்ள மென் திசுக்கள், தசைகள், இரத்த நாளங்கள், நரம்புகள், மூச்சுக்குழாய், உணவுக்குழாய், மற்றும் கழுத்துப் பகுதியில் உள்ள C 4 தண்டு வட எலும்பு அனைத்தும் வெட்டுப்பட்டு அதை சுற்றியுள்ள மென் திசுக்கள் கருஞ் சிவப்பு நிற கன்றிய காயங்கள் காணப்பட்டது.

9). 11 x 3 cm x கழுத்து குழி ஆழத்திற்கு முன் மற்றும் கழுத்தின் மையம் மூன்றாம் பகுதியில் சாய்ந்த வாக்கில் வெட்டுக்காயம் மேல்கூறிய 8 வது காயத்தின் 1 செ.மீ கீழ் காணப்பட்டது. மேலும் அக்காயத்தை கூராய்வு செய்து பார்த்ததில் அக்காயத்தின் அடியில் உள்ள மென் திசுக்கள், தசைகள், இரத்த நாளங்கள், நரம்புகள், மூச்சுக்குழாய், உணவுக்குழாய், மற்றும் கழுத்துப் பகுதியில் உள்ள C 6 தண்டு வட எலும்பு அனைத்தும் வெட்டுப்பட்டு அதை சுற்றியுள்ள மென் திசுக்கள் கருஞ் சிவப்பு நிற கன்றிய காயங்கள் காணப்பட்டது.

10). 8 x 4 cm x சதை ஆழத்திற்கு வலது புற தோள்பட்டையின் பின்பக்கம் சாய்ந்த வாக்கில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

11). 6 x 3 cm x சதை ஆழத்திற்கு இடது புற தோள்பட்டையின் முன்பக்கம் சாய்ந்த வாக்கில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

12). 2 x 1 cm x சதை ஆழத்திற்கு வலது புற புஜத்தில் மையம் மூன்றாம் பகுதி வெளிப்புறமாக சாய்ந்த வாக்கில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

13). 3 x 2 cm x சதை ஆழத்திற்கு வலது புற புஜத்தின் கீழ் மூன்றாம் பகுதி வெளிப்புறமாக சாய்ந்த வாக்கில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

14). 7 x 4 cm x சதை ஆழத்திற்கு வலது புறம் முன் கையில் கீழ் மூன்றாம் பகுதி பின்பக்கமாக சாய்ந்த வாக்கில் வெட்டுக்காயம் காணப்பட்டது. மேலும் அக்காயத்தை கூராய்வு செய்து பார்த்ததில், முன் கையில் உள்ள வெளிப்புறமான எலும்பு வெட்டுப்பட்டு அதை சுற்றியுள்ள மென் திசுக்கள் கருஞ் சிவப்பு நிற கன்றிய காயங்கள் காணப்பட்டது.

15). 2 x 1 cm x சதை ஆழத்திற்கு இடது புற வயிற்றின் மேல் மூன்றாம் பகுதி முன்பக்கமாக வெட்டுக்காயம் காணப்பட்டது.

16). 5 x 1 cm வலது புற தோள்பட்டையின் பின்புறமாகவும், 7 x 2 செ.மீ இடது புற கழுத்தில் கீழ் மூன்றாம் பகுதியிலும், 7 x 1 செ.மீ வலது புற புஜத்தில் மையம் மூன்றாம் பகுதியில் வெளிப்புறமாகவும், 5 x 1 செ.மீ இடது புற மையம் மூன்றாம் பகுதி மார்பிலும், செம்பழுப்பு நிற சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

17). மேல் பகுதி மற்றும் கீழ் பகுதியில் உள்ள பற்கள், அதனை ஒட்டியுள்ள பற்கள், கீழ்புறம் இடது புறம் உள்ள சிங்கப்பல், ஆகியவை உடைந்து, அதை சுற்றியுள்ள மென் திசுக்கள் கருஞ் சிவப்பு நிற கன்றிய காயங்கள் காணப்பட்டது.

18). இருதயம், நுரையீரல்கள், கல்லீரல், மண்ணீரல், இரு புற சிறு நீரகங்கள், இடுப்பு எலும்புகள், முதுகெலும்புகள், நல்ல நிலையில் காணப்பட்டது.

19). இரைப்பையில், 50 மி.லி. சாம்பல் போன்ற திரவம் காணப்பட்டது. உள்ளுறுப்புகள் அனைத்தும் வெட்டுக்காயத்தில் வெளிர் நிறத்தில் காணப்பட்டது. உள்ளுறுப்புகளை சேகரித்து தஞ்சாவூர் வட்ட தடய அறிவியல் துறைக்கு ஆய்விற்காக அனுப்பப்பட்டது. அந்த அறிக்கையில் அவர் மது உட்கொண்டிருந்தார் என கண்டறியப்பட்டது. மேலும் இரத்த மாதிரிகளை சேகரித்து திருச்சி வட்ட தடய அறிவியல் துறைக்கு இரத்த வகையை கண்டறிய அனுப்பப்பட்டது. அந்த அறிக்கையில் அது B இரத்த வகை என கண்டறியப்பட்டது. நான் வழங்கிய Serological Report **அ.சா.ஆ-**

**11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்கூறிய நபர் தலை மற்றும் கழுத்து பகுதியில் ஏற்பட்ட பலதரப்பட்ட வெட்டுகாயத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் இரத்தக் கசிவினால் இறந்துள்ளார் என கூறி, பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

காவல் துணை கண்காணிப்பாளர் எந்த தேதியில், எங்கு வைத்து என்னை விசாரித்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள், மதுபோதையில் ஒருவர், கூர்மையான வேலியின் மீது விழுந்தால் முதல் விசாரணையில் சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் ஏற்பட வாய்ப்பு இல்லை. துணை காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது ஆயுதத்தை காட்டி விசாரிக்கவில்லை என்று சொன்னால் ஞாபகமில்லை. முதல் விசாரணையில் நான் சொன்ன காயச்சான்றுகளில் கண்டுள்ள காயங்களுக்கு வயதை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.12 18:26:56 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.